அன்றன்றுள்ள **அப்பம்** வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

பிப்ரவரி-2024 | மரம் - 3 | கன்று - 2 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-

நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும்
**செம்மையுமானதைச் செய்வதினால்,**
நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும்
என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு,
**நான் உனக்குக் கற்பிக்கிற**
இந்த எல்லா வார்த்தைகளையும்
நீ கவனித்துக் கேள்.

உபாகமம் 12:28



ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனதின் குரல்

## ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

அன்பிற்குரிய பெற்றோர்களே, மழலைகளே, இளைஞர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஒலிவமரக் கன்றுகள் இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். வாழ்வின் புதிய ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

ஆண்டவரால் அனுமதிக்கப்படாத எந்தவொரு காரியமும் உங்கள் வாழ்க்கையில் நடந்துவிடாது. அவர் உங்களுக்காக வைத்திருக்கும் அனைத்து திட்டங்களும் தாமதித்தாலும் கட்டாயம் நிறைவேறியே தீரும். ஆகவே, உங்களால் முடிந்ததை செய்யும் பொழுது உங்களால் முடியாததை ஆண்டவர் செய்வார்.

உங்களை நீங்கள் நேசிப்பது போல பிறரையும் உங்களை விட உயர்வானவர்களாக கருதி நேசிக்கப் பழகுங்கள். யாரையும் கண்ணியக் குறைவாக நடத்திட வேண்டாம்.

அரையாண்டுத் தேர்வு முடிவுகள் வெளிவந்த இன்னும் சில மாதங்களில் ஆண்டு இறுதித் தேர்வு உங்களை துரத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்பது ஆண்டவரின் திட்டமாய் இருக்கும் போது அதை எந்த யாராலும் தடுக்கவே முடியாது. ஆண்டவரை அதிகமாய் அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அறியாதோர் தேவனை புரியவும் அவரை அறியச் செய்ய முயற்சி செய்யுங்கள்.

எல்லா புனிதர்களின் வாழ்விலும் சொல்லப்படாத இருண்ட கடந்தகாலம் உண்டு. அதே வேளையில் எல்லா பாவிகளுக்கும் இயேசுவுக்குள் ஒரு எதிர்காலம் உண்டு என்பதை நினைத்து தடுக்கி விழுந்த காலங்களை பொருட்டாக எண்ணாமல் முன்னேறிச் செல்ல முயலுங்கள். உலகத்திற்கு நீ கலங்கரை விளக்காக இருக்க வேண்டும் என்றால் முதலில் உன் வீட்டுக்குள் மெழுகுவர்த்தியாக இருக்க எளிய முயற்சியை இன்றே துவங்குங்கள்.

ஆம், அர்ப்பமான ஆரம்பத்தை யார்தான் அசட்டைப் பண்ணக்கூடும்?

அடுத்த இதழில் சந்திப்போம் குழந்தைகளே!

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



# சீத்திம் மரம்

**சீத்திம் மரம்** (Acacia Tree) பாலைவனம் போன்ற வனாந்தரங்களில் காணப்படுகிற ஒரு முள் மரமாகும். எபிரேயத்தில் சீத்திம் என்றால் முள் மரம் என்று அர்த்தம். இதன் பொதுப்பெயர் அகசியா (Acacia), விஞ்ஞானப்பெயர் அகசியா டார்டில்ஸ்.

சீத்திம் மரம் என்பது நமது ஊரில் கிடைக்கும் கருவேல மரம் போன்றது. ஒரு குடை விரிக்கப்பட்டது போல் தோற்றமுடையது. இம்மரம் 12 அடி வரை வளரும். சீரான கிளைகள் 1 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை வளரும். கருவேல மரத்தில் இலையையொட்டித்தான் முள் இருக்கும். ஆனால் இந்த மரத்தினுடைய இலை, தண்டு, கிளை போன்ற அனைத்து பாகங்களிலும் முட்கள் இருக்கும். ஒரு முள் அரை அடி நீளம் இருக்கும். ஒட்டகம் இலையை மாத்திரம் சாப்பிட முடியும். கீழே விழும் விதைகளை மான் சாப்பிடும். இதன் அடிமர பட்டையில் இருந்து பிசின் போன்ற திரவம் கிடைக்கும். இது அரேபிய பிசின் (gummi arabicum) என்பர். இது மருத்துவ குணம் கொண்டது. விதைகள் மண்ணின் மேற்பரப்பிலிருந்தே சீராய் பிரிந்து 30 டிகிரி வளைந்து வளரும். மிக ஆழமான வேரும், அவைகள் நீரில்லாத இடங்களில் நீண்டு வளர்ந்து நீரை ஈர்த்து வளரும். மற்ற மரங்களால் இதோடு போட்டி போட முடியாது. இம்மரத்தில் செய்யப்பட்ட பொருட்கள் 4000 வருடங்கள் ஆனாலும் அப்படியே இருக்குமாம். பூச்சியால் அரிக்க முடியாது. இது கடினமான மரமாகும்.



கேதுரு மரம், தேவதாரு மரம், கருங்காலி மரம் போன்ற விலையுயர்ந்த மரங்களையே அந்நாட்களில் பயன்படுத்தினர். இந்த சீத்திம் மரத்தை யாரும் பயன்படுத்த மாட்டார்கள். இம்மரத்தை தீட்டுள்ள மரம் என்றுகூட சொல்லுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட மரத்தைத்தான் கர்த்தர் பயன்படுத்தினார். கர்த்தரின் உடன்படிக்கை பெட்டியும் பலிபீடமும் இன்னும் வாசஸ்தலத்திற்குத் தேவையானவைகளுக்கும் சீத்திம் மரத்தையே பயன்படுத்தினார்.


கர்த்தரின் சாட்சிப்புத்தகம் வைக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி, சமுகதப்பங்கள் வைக்கப்பட்ட பரிசுத்த மேஜை, தகனபலிபீடம், தூபபீடம், வாசஸ்தலத்து பலகைகள், திரைச்சீலை தாங்கும் நான்கு தூண்கள் மற்றும் சில பாத்திரங்களும், தூண்களும், கம்பங்களும் சீத்திம் என்ற சாதாரண மரத்தினால் செய்யப்பட்டவைகள்.

கர்த்தர் மோசேயை நோக்கி: ‘‘சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைப் பண்ணக்கடவர்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதன் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக’’ (யாத்திராகமம் 25:10). சீத்திம் மரத்தால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி... (யாத். 25:13). சீத்திம் மரத்தால் ஒரு மேஜையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமாய் இருக்கக்கடவது (யாத். 25:23). அந்தத் தண்டுகளைச் சீத்திம் மரத்தினால் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேஜை சுமக்கப்படவேண்டும் (யாத். 25:28) என்றார்.

கூடார வாசஸ்தலம் நிமிர்ந்துநிற்கும் பலகைகளையும் சீத்திம் மரத்தால் உண்டுபண்ணினார்கள். சீத்திம் மரத்தினால் செய்த பொன்தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களை உண்டுபண்ணினார்கள்.







பலிபீடத்துக்குச் சீத்திம் மரத்தால் கம்பங்களை உண்டாக்கி அவைகளை வெண்கலத்தகட்டால் மூடினார்கள்.

திரைச்சீலை தாங்கும் நான்கு தூண்கள் சீத்திம் மரத்தால் செய்யப்பட்டது. தகனபலிபீடத்தை இம்மரத்தினால் உண்டாக்கினார்கள் (யாத்திராகமம் 27:6).

தகனபலிபீடத்தையும் சீத்திம் மரத்தால் உண்டாக்கினான்; அது ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமும் சதுரவடிவும் மூன்று முழ உயரமுமானது. 2 அதின் நாலு மூலைகளிலும் அதனோடு ஏகமாயிருக்கிற அதின் நாலு கொம்புகளையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடிச்செய்தனர் (யாத்திராகமம் 38 : 1). இதுவே சிறப்பம்சம் ஆகும்.

''வனாந்தரத்திலே கேதுருமரங்களையும், சீத்திம்மரங்களையும், மிருதுச்செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டு, அவாந்தரவெளியிலே தேவதாருவிருட்சங்களையும், பாய்மரவிருட்சங்களையும், புன்னைமரங்களையும் உண்டுபண்ணுவேன்'' (ஏசாயா 41:19). யாரும் கண்டுகொள்ளாத சீத்திம் மரத்தை, கேதுரு மரத்தோடு தேவன் கௌரவப்படுத்தினார்.

இயேசு கிறிஸ்துவின் தலையில் சூடப்பட்ட முட்கிரீடம் சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டது என்று நம்பப்படுகிறது.

இப்படி கேட்பார் அன்றி கிடந்த இந்த சாதாரண சீத்திம் மரத்தை தான், தேவன் தான் தங்கும் ஸ்தலமாகத் தெரிந்துகொண்டார்.

ஒரு காலத்தில் நாமும் இந்த சீத்திம் மரத்தை போன்று கடுமையான முட்களுடன், கேட்பாரின்றி கிடந்த நம்மை, இன்று தேவன் தான் தங்கும் ஆலயமாய் மாற்றியுள்ளார்.

கேதுரு மரம் போன்ற விலையுயர்ந்த ஞானிகளையும், பிரபுக்களையும் விட்டுவிட்டு, ஒழுங்கற்ற கொடுமையான முட்களை போன்ற சீத்திம் மரமான நம்மை தெரிந்து கொண்டாரே அது தான் கிருபை.

தகுதியுள்ளவனை தேர்ந்தெடுப்பதல்ல, தான் தேர்ந்தெடுத்தவனை தகுதியாக்குவதே கிருபை. கர்த்தர் எளியவர்களையும் சமுதாயத்தால் வெறுக்கப்பட்டவர்களையும் வரியோர்களையும் விரும்பி ஏற்றுக்கொள்கிறார். அவரே திக்கற்றவர்களின் நம்பிக்கை பாத்திரம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை சிறப்பான இடத்தில் வைப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். நாம் நம்முடைய இருதயத்தை செம்மையாக வைத்திருந்தால், கர்த்தர் நம்மையும் முக்கியமான காரியங்களுக்கு பயன்படுத்துவார்.

## வெண்கலம்

பலிபீடத்தை சீத்திம் மரத்தினால் செய்து அதைச்சுற்றி வெண்கலத்தால் மூடுவார்கள். பலிபீடத்தின் மீது பலிகளை செலுத்தி எந்தளவிற்கு சூடு ஏற்பட்டாலும் தாங்கக்கூடிய வலிமை பொருந்தியது. இன்றைய விஞ்ஞானிகள் லண்டனிலே இதை ஒரு மாதிரியாக செய்து சோதித்தார்கள். சீத்திம் மரப்பலகையை வெண்கலத்தால் மூடி, ஒரு கதவைப்போல செய்து நெருப்பினால் சூடேற்றினர். அதிகப்படியான வெப்பத்தை (1200 டிகிரி செ.கி.) தந்தார்கள். மரத்திற்கு ஒரு சேதமும் ஆகவில்லை. வெண்கலம் அதை தாங்கி கொண்டது.

அக்கினியை தாங்க வேண்டும் என்றால் வெங்கலத்தைப்போல் மன உறுதி வேண்டும். நாம் சீத்திம் மரம் போல் என்றாலும் நம்மை தாங்கிக்கொண்டிருப்பது யூத ராஜ சிங்கமான இயேசு கிறிஸ்துவே.

தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

படைவீரர்கள் இயேசுவைச் சித்திரவதைக் கூடத்துக்கு இழுத்துச் சென்றார்கள்.

இரும்புச் சங்கிலிகள், முள்கம்பிகள், இரும்பு உருண்டைகள் என்று கையில் கிடைத்த ஆயுதங்களையெல்லாம் வீரர்கள் கைகளில் எடுத்துக் கொண்டார்கள். இயேசு அவர்கள் முன்னிலையில் நிராயுதபாணியாய் நின்றார்.

இயேசுவைச் சங்கிலியால் கட்டி ஒரு தூணில் பிணைத்த வீரர்கள் அவரை அடிக்கத் துவங்கினார்கள். முள்கம்பிகள் அவருடைய முகத்தையும் உடம்பையும் இழுத்துக் கிழித்தன. சங்கிலிகளும் கூர்மையான முள் சாட்டைகளும் இயேசுவின் உடம்பில் இரத்தக் கோடுகளை வரைந்தன. இயேசு வலியால் துடித்தார். ஆனாலும் மனம் தளரவில்லை.

வீரர்கள் தங்கள் கை ஓயும் வரை இயேசுவை அடித்தார்கள். இயேசு இரத்த வெள்ளத்தில் மிதந்தார்.

பின் அவர்கள் அவருக்கு ஒரு சிவப்பு அங்கியை அணிவித்து

'யூதரின் ராஜாவே வாழ்க...' என்று சொல்லிக்கொண்டே எட்டி உதைத்தார்கள். இயேசுவின் காயமான உடம்பு மண்ணில் உருண்டது.

அவர்கள் கூர்மையான முட்களினால் ஒரு கிரீடத்தைப் பின்னி இயேசுவின் தலையில் வைத்தார்கள். தலையில் வைத்த கிரீடத்தின் மேல் தடிகளால் அடித்தார்கள். முட்கள் அவருடைய தலையைத் துளைத்தன. நெற்றியைக் கிழித்தன. தலை இரத்தத்துக்குள் அமிழ்ந்தது.

சித்திரவதை முடிந்து இயேசுவைத் தூக்கிக் கொண்டு மக்களின் முன்னிலையில் நிறுத்தினார்கள் படைவீரர்கள்.

'பாருங்கள். இதோ மனிதன். ' பிலாத்து சொன்னான்.

'சிலுவையில் அறையும்...'

'சிலுவையில் அறையும்...'

'சிலுவையில் அறையும்...'

மக்கள் கத்தினார்கள்.

'பாருங்கள். இவனுக்கு எவ்வளவு பெரிய தண்டனை கொடுத்திருக்கிறேன். இவன் இனிமேல் உங்களுக்கு எதிராகப் பேசுவான் என்று நினைக்கிறீர்களா? சிலுவையில் அறையக்கூடிய



அளவுக்கு இவனிடம் நான் குற்றம் ஏதும் காணவில்லை. எனவே நான் இவனை விட்டுவிடப் போகிறேன்' பிலாத்து மீண்டும் சொன்னான்.

'குற்றம் இல்லையா? எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம் உண்டு. இவன் தேவகுமாரன் என்று பிரகடனப்படுத்தினான். எனவே இவன் சாகவேண்டும்' அவர்கள் குரலுயர்த்தினார்கள்.

பிலாத்து இதைக் கேட்டு இன்னும் அதிகமாக வருந்தினான். ஒருவேளை இவர் தேவகுமாரனாக இருப்பாரோ? என்ற கவலையும் அவரைப் பிடித்துக் கொண்டது.

'இவன் செய்த குற்றம் என்ன?' பிலாத்து குரலை உயர்த்தினார்.

'சிலுவையில் அறையும்...'

'சிலுவையில் அறையும்...'

'சிலுவையில் அறையும்...'

மக்கள் விடாமல் கத்திக் கொண்டே இருந்தார்கள்.

'உங்கள் இராஜாவை நான் சிலுவையில் அறையவா?' யூதர்களை நோக்கிய ஒரு ரோமரின் கேள்வியாக ஒலித்தது பிலாத்துவின் அந்த கேள்வி.

'எங்களுக்கு இராயன் மட்டுமே இராஜா' குரல் கூட்டத்திலிருந்து கிளம்ப, எல்லோரும் அதையே திரும்பச் சொன்னார்கள். அந்த கத்தலில் இருந்த அரசியல் விளையாட்டு பிலாத்துவுக்கு விளங்கியது. இனிமேல் இயேசுவை விடுவிப்பது சாத்தியமில்லை என்பது பிலாத்துவுக்குப் புரிந்தது.

இயேசுவை விடுவிக்க நினைக்கும் தன்னுடைய முயற்சி பெரும் கலவரத்தை நோக்கிப் போவதை அறிந்த பிலாத்து கூட்டத்தினர் முன்னிலையில் தண்ணீரை எடுத்து

'இவனுடைய இரத்தப் பழியில் எனக்குப் பங்கில்லை. நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறி தன்னுடைய கைகளைக் கழுவினான்.

மக்கள் முன்னிலையில் தன்னுடைய கைகளைக் கழுவி விட்டு ஆசனத்தில் அமர்ந்தான் பிலாத்து.

'இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்' மக்கள் அசரவில்லை.

'சரி... இவனை உங்கள் விருப்பம்போலச் செய்ய அனுமதிக்கிறேன்' பிலாத்து சொல்ல மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

பரபாஸ் விடுதலை செய்யப்பட்டான்.

இயேசு சிலுவை மரணத்துக்காய் தீர்ப்பிடப்பட்டார்.

அதன்பின் இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கான வேலைகள் மும்முரமாகின. பாரமான சிலுவை ஒன்று வாங்கிவரப்பட்டது.

சிலுவை என்பது பாரமான இரண்டு மரத்துண்டுகளை, இரண்டு இரும்பு கொக்கிகளால் இணைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு கொலைக்கருவி. அவமானச் சாவு யாருக்கெல்லாம் வழங்கப்படுகிறதோ அவர்களை அந்த சிலுவையில் கிடத்தி, கைகளை விரித்து மரத்தின் இரண்டு முனைகளிலும் வைத்து ஆணியால் அறைந்து, கால்களை கீழே இழுத்து இன்னொரு ஆணியால் அறைந்து தொங்க விடுவார்கள்.

பூமியிலும் ஆகாயத்திலும் இல்லாமல் வருவோர் போவோரெல்லாம் பார்க்கும்விதமாக மலையில் அவர்களை சிலுவையில் சாகும் வரைத் தொங்க விடுவார்கள்.

சிலுவைச் சாவு யாருக்கெல்லாம் வழங்கப்படுகிறதோ, அவர்கள் தாங்களாகவே அந்த சிலுவையைத் தோளில் சுமந்து கொண்டு தங்கள் மரணம் நிகழப்போகும் இடம் வரை தூக்கிக் கொண்டும் வரவேண்டும். ஒரு கொடுமையான சாவு. சாவு பற்றிய பயம் ஒருபுறம், அவமானம் ஒருபுறம், நினைத்துப் பார்க்க முடியாத வலி ஒருபுறம் என சிலுவைச் சாவுக் குற்றவாளிகள் படும் அவஸ்தை விவரிக்கக்கூடியதல்ல.



சிலுவையில் தொங்கவிட்டபின் மாலை வரை சிலுவையிலேயே தொங்கியும் முழுமையாய் இறக்காத மனிதர்களும் இருப்பார்கள். படைவீரர்கள் வந்து அவர்களுடைய கால்களை வெட்டி எறிவார்கள்.

இதோ, இயேசுவின் தோளிலும் இப்போது ஒரு சிலுவை வைக்கப்படுகிறது. இயேசுவை ஏற்கனவே இரவு முழுவதும் சித்திரவதை செய்திருந்ததால் அவரால் நேராக நிற்கவும் முடியவில்லை. ஆனால் கண்களிலும், மனதிலும் மட்டும் அதே உறுதி.

தொடரும்...




கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ 9003067777




98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

# தலைவன் மோசே

**1-15 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**






# நெருப்புக்கோழியின் குஞ்சுகள் தங்கள் தாயிடம் செல்ல சரியான வழிகாட்டுங்கள்.



# அ... ஆ...

## இந்த புதிய ஆண்டில்...

1 அன்பாக தேவனிடத்திலும், உன் சகோதரனிடத்திலும் இரு.

2 ஆவியானவரை உன் வாழ்க்கை முழுவதிலும் செயல்படுத்து.

3 இயேசுவைப்போல் உன்னை மாற்ற ஆசைப்படு.

4 ஈகை குணம் கொண்டு உன்னிடத்தில் இருப்பதை மற்றவனுக்கு கொடு.

5 உண்மையுள்ளவனாய், தாழ்மையுள்ளவனாய் வாழு.

6 ஊழியம் செய், பிதாவுடைய சித்தத்தை அறிந்து கொண்டு.

7 ஐயப்படாமல் கர்த்தருக்குள் சந்தோஷமாய் வாழு.

8 என் வாழ்க்கை, என் குடும்பம் என்ற குறுகிய எண்ணங்களை அகற்றிவிடு.

9 ஏற்றுக்கொள் சந்தோஷமாக, மனரம்மியமாக உன் வாழ்வில் வரக்கூடிய அனைத்து பிரச்சனைகளையும்,

10 ஒத்துக் கொள் உன் தவறுகளை, அதைத் திருத்திக் கொள் விரைவாக.

11 ஓயாமல் உழை, உன்னை படைத்த கடவுளுக்காக உன் குடும்பத்திற்காக.

12 ஔவியம் அகற்றி அன்பைத் தரித்துக்கொள்.

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு,
அவர் உன்னை ஆதரிப்பார்;
நீதிமானை ஒருபோதும்
தள்ளாடவொட்டார்.
சங்கீதம் 55:22

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!
நீங்கள் எல்லாரும் என்னிடத்தில்
வாருங்கள்; நான் உங்களுக்கு
இளைப்பாறுதல் தருவேன்.
மத்தேயு 11:28

# இயேசு வாழ்வின் போராட்டங்களை அமைதிப்படுத்துகிறார்

இயேசுவின் கூடாரம்



## ஆசரிப்புக் கூடாரம் தொடர்புடைய பொருட்களைக் கண்டு வட்டமிடுக.

மேஜை
கிருபாசனம்
கேருபீன்
மூடுதிரை
தூபபீடம்
குத்துவிளக்கு
தகன பலிபீடம்



தூண்
தண்டுகள்
பலகைகள்
பசும்பொன்
அப்பங்கள்
சாட்சிப்பெட்டி
ஒலிவ எண்ணெய்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | தூ | ப | பீ | ட | ம் | மூ | டு | தி | ரை |
| ப் | த | க | ன | ப | லி | பீ | ட | ம் | கி |
| ப | கே | லி | ப | சா | ஒ | த் | கு | ஒ | ரு |
| ங் | ரு | த | சு | ட் | ப | ச் | த் | லி | பா |
| க | பீ | ண் | ம் | சி | ல | வி | து | வ | ச |
| ள் | ன் | டு | பொ | ப் | கை | தூ | வி | எ | ன |
| தூ | கு | க | ன் | பெ | க | ண் | ள | ண் | ம் |
| ண | பெ | ள் | தி | ட் | ள் | ப | க் | ணெ | க |
| மே | ஜை | பா | ங் | டி | கே | ண் | கு | ய் | ள் |

# போர்வீரர்கள் பரியாசம் செய்தபோதிலும் அமைதியுடன் இயேசு

இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.





விடைகள்: 1. வீரனின் கையில் கோல், 2. வீரனின் ஆடை, 3. பறவை,
4. தூணில் பூ, 5. வீரனின் தலைக்கவசம்

# நெருப்புக்கோழி

விலங்கியல் பெயர் : Struthio Camelus


**நெருப்புக்கோழி** (Ostrich) பறவை இனங்களில் மிகப்பெரிய உயிரினம். இதற்கு தீக்கோழி, தீக்குருவி என்னும் வேறு பெயர்கள் உண்டு. நெருப்புக்கோழிகளின் பூர்வீகம் ஆப்பிரிக்கா. கிழக்கு ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா மற்றும் சஹாரா பகுதிகளில் உள்ள பாலைவனங்களில் இவை வசிக்கும். நெருப்புக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வெப்பப் பிரதேசத்தில் தாக்குப் பிடிக்கும் விதத்தில் இதன் உடலமைப்பு உள்ளதால் இதற்கு நெருப்புக்கோழி என்று பெயர் வந்தது.

உலகமெங்கும் சுமார் 20 லட்சம் நெருப்புக்கோழிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இவை 40-45 ஆண்டுகள் வரை வாழும். நெருப்புக்கோழிகள் கூட்டமாக வாழும். ஒரு கூட்டத்தில் 10 முதல் 50 பறவைகள் இருக்கும்.

நெருப்புக்கோழி நீண்ட கழுத்தையும், கால்களையும் கொண்டவை. இது 63 முதல் 145 கிலோ எடை கொண்டது. இது உலகிலேயே அதிக எடையும், உயரமும் உள்ள பறவையாகும். இது சுமார் 6-9 அடி வரை உயரமாக வளரக்கூடியது. இவையால் தொடர்ந்து 45 நிமிடங்கள் வரை 70 km/h (43 mph) வேகத்தில் ஓட முடியும். ஒரு மாத வயதுள்ள நெருப்புக்கோழி மணிக்கு 55 கிமீ (35 மைல்) வேகத்தில் ஓடக்கூடியவை. சிறிய உடலமைப்புள்ள மனிதர்கள் சவாரிசெய்யக்கூடிய அளவுக்குத் நெருப்புக்கோழிகள் பெரியவைகளாகும். இதனால் ஆப்பிரிக்கா, கென்யா, நெதர்லாந்து மற்றும் அரேபியாவின் சில பகுதிகளில் நெருப்புக்கோழிகளுக்கான ஓட்டப் பந்தயமும், சவாரிப் போட்டியும் நடைபெறுகிறது. பண்டைய எகிப்து நாட்டில் நெருப்புக் கோழிகள் சாரட் வண்டிகளை இழுப்பதற்காக பயன்படுத்தப்பட்டன.








2 அங்குலம் பெரிய கண்களை உடையது. 2 மீட்டர் நீளம் கொண்ட இறக்கைகள் இருந்தாலும் நெருப்புக் கோழியால் பறக்க முடியாது. இதன் சிறகுகள், கடுமையான வெப்பத்தில் இருந்து காக்கும் வகையில் மென்மையான பொதி போல் இருக்கும். இறக்கையின் முடிவில் கொக்கி போன்ற இரண்டு நகங்கள் இருக்கும். இதன்மூலம் எதிரிகளைத் தாக்கும்.

நெருப்புக்கோழியின் கால்கள் மிகவும் பலம் பொருந்தியவை. நெருப்புக்கோழியானது கால்களைக் கொண்டு ஓடும் மிக மிக வேகமான பறவையினம். இது உலகில் வேகமாக ஓடக்கூடிய உயிரினங்களில் மூன்றாம் இடத்தில் உள்ளது. நெருப்புக்கோழியின் கால்கள் மிகவும் நீண்ட அளவுடையது. ஒரு தாவலில் 16 அடி வரை தாவக்கூடியது. அவற்றை உண்ண வரும் சிங்கம், ஓநாய் போன்றவற்றிடம் இருந்து ஓடியே தப்பித்துவிடும். மற்ற எந்தப் பறவைக்கும் இல்லாதவாறு நெருப்புக்கோழிகளின் கால்களில் வளைவான 2 பெரிய விரல்கள் மட்டுமே இருக்கும். அதில் ஒரு விரலில் மட்டுமே நகம் உள்ளது.



நெருப்புக்கோழிகளுக்கு பற்கள் இல்லை. எனவே உணவை அரைத்து உண்பதற்காகவே கூடவே கற்களையும் விழுங்குகிறது.

நெருப்புக்கோழிகள், தாவரங்கள், விலங்குகள், கிழங்குகள், இலைகள், பழங்கள், வெட்டுக்கிளிகள்,



பூச்சிகள், பாம்புகள், பல்லிகள் மற்றும் ஊர்வன ஆகியவற்றை விரும்பி உண்ணுகின்றன. நெருப்புக்கோழிகள் தண்ணீர் குடிப்பதில்லை.


நெருப்புக்கோழிகளின் முட்டைகளே உலகில் அதிக எடையுள்ள பெரிய முட்டைகளாகும். முட்டையின் எடை 1.4 கிலோ மற்றும் 15 செ.மீ. அளவும் கொண்டது. 40 கோழி முட்டைகளுக்குச் சமம். இதன் முட்டைகள் குஞ்சு பொரிக்க 42 முதல் 46 நாட்கள் ஆகும்.

சுவீடன் போன்ற குளிர்ப்பிரதேசங்களில் இவை இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. மேலும் தோல் அலங்காரப் பொருட்கள் தயாரிக்க பயன்படும். இதன் இறகுகள் தொப்பி போன்ற பொருட்கள் தயாரிக்க பயன்படும்.


எதிரி விலங்குகள் அண்மையிலுள்ளபோது, தான் தெளிவாகக் காணப்படாமலிருப்பதற்காக நெருப்புக்கோழி, தனது கழுத்தையும், தலையையும் நிலத்தில், படுக்கை நிலையில், வைத்துக்கொள்ளும். பயமுறுத்தப்பட்டால், இவை தனது வலுவான கால்களால் உதைத்துக் கடும் காயத்தை உண்டாக்கக்கூடியது.

**தீக்குருவிகள் தங்கள் செட்டைகளை அசைவாட்டி ஓடுகிற ஓட்டம், நாரை தன் செட்டைகளாலும் இறகுகளாலும் பறக்கிறதற்குச் சமானமல்லவோ? (யோபு 39:13). அது செட்டை விரித்து எழும்பும்போது, குதிரையையும் அதின்மேல் ஏறியிருக்கிறவனையும் அலட்சியம்பண்ணும் (யோபு 39:18)** என்று நெருப்புக்கோழி (தீக்குருவி) ஓடுகிற ஓட்டம் குறித்து வேதம் கூறுவதைக் காணலாம்.


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே. - சங்கீதம் 119:9




வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. - சங்கீதம் 19:1




எவ்விதத்திலாவது நான் உங்களிடத்தில் வருகிறதற்குத் தேவனுடைய சித்தத்தினாலே எனக்கு நல்ல பிரயாணம் சீக்கிரத்தில் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். - ரோமர் 1:12




கட்டளையைக் காத்துக்கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்; தன் வழிகளை அவமதிக்கிறவன் சாவான். - நீதிமொழிகள் 19:16

# ஜெபத்திற்கு பலன்



ஒரு சமயம் நாத்திகன் ஒருவன் மதுபானக் கடை ஒன்றை முதலாவதாக பட்டணத்தில் திறக்க அரசாங்கத்திடம் அனுமதி பெற்றிருந்தான்.

அந்தக்கடை அந்த பட்டணத்தில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு அருகாமையில் இருக்கபோகிறபடியால் அந்த ஆலய விசுவாசிகள் அதை விரும்பவில்லை. விசுவாசிகள் எல்லாரும் அந்த மதுக்கடை இல்லாமல் போகும்படி தேவனிடத்தில் விசுவாசமாய் ஜெபித்தார்கள்.

அந்த ஜெபத்தின் பயனாக அவர்கள் கண்கள் ஆச்சரியமான காரியம் நடந்ததை கண்டன. அது என்னவென்றால் அந்தக்கடை திறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவர்கள் ஜெபித்தபடி மின்னல் தாக்கி அந்த கடை எரிந்து தரைமட்டமானது.

விசுவாசிகள் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

ஆனால் அந்த மதுபானக்கடை உரிமையாளரோ இந்த விசுவாசிகள் ஜெபித்ததின் விளைவாகத்தான் அவருடைய கடைக்கு இவ்விதம் சம்பவித்தது என்ற நம்பினான்.

ஜெபித்த கிறிஸ்தவர்களை நீதிமன்றத்திற்கு இழுத்தார். இவர்கள் விசுவாசத்தோடு ஜெபித்ததினால் தான் என் கடை மின்னல் தாக்கி எரிந்து தரைமட்டமானது என்று நீதிபதியினிடத்தில் வாதிட்டான். ஆனால் விசுவாசிகளோ, தங்களுக்கும் கடை எரிந்து சாம்பலானதற்கும் எந்த தொடர்பும் இல்லை என வாதிட்டார்கள்.

முதல் வாய்தாவிலே நீதிபதி இரு பக்கத்தாரையும் விசாரித்துவிட்டு ‘‘இந்த நிலையில் என்னுடைய தீர்ப்பு எப்படி இருக்க போகிறது என்று எனக்கே தெரியவில்லை

ஆனால் ஒரு உண்மை விளங்குகிறது. அந்த மதுக்கடை உரிமையாளனான நாத்திகன் விசுவாசிகள் ஜெபித்த ஜெபத்தை நம்புகிறான். ஆனால் இந்த கிறிஸ்தவர்களுக்கு தங்கள் ஜெபத்தின் வல்லமையில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அதனால் தான் தங்கள் ஜெபத்தால் கடை எரியவில்லை என்று வாதாடுகிறார்கள்’’ என்று கூறினார்.

எனக்கு பிரியமான குழந்தைகளே!

ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் உண்டு. எதற்காக ஜெபம் பண்ணுகிறீர்களோ அதற்கான பதில் தேவனிடத்திலிருந்து கிடைத்து விடும்.

மனிதன் தரும் பதிலை விட தேவன் மிக விரைவாகவும் முழுமையாகவும் பதில் தருவார். என்பது நிச்சயம். அப்போஸ்தலனாகிய பேதுரு சிறையிலிருந்த போது விசுவாசிகள் அவன் விடுதலைக்காக ஜெபித்தார்கள். அதன் விளைவாக தேவன் தமது தூதனை அனுப்பி பேதுருவை விடுதலை செய்தார். விடுதலையாகி வந்து கதவை தட்டின போது பேதுரு நின்று கொண்டு இருந்ததை பார்த்த விசுவாசிகள் இவ்வளவு சீக்கிரம் தேவன் விடுதலை செய்வார் என்று அவர்கள் நம்பாமல் விடுதலையானதைக் கண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள்.

தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறார் என்பதை அநேகர் நம்புவது இல்லை .

ஜெபத்தினால் நோய்கள் சுகம் ஆகும், பிசாசுகள் நீங்கும், மனுஷன் எதெல்லாம் நடக்க முடியாது என்று நினைக்கிறானோ அதெல்லாம் அவன் ஆச்சரியப்படும் அளவுக்கு அற்புதங்கள் நடக்கும்.

உங்கள் வாழ்க்கையில், ஜெபத்தில் தேவ வல்லமையை விசுவாசித்து அனுபவித்துப் பாருங்கள். நீங்களே ஆச்சரியப்படும்படி பெரிய காரியங்கள் நடக்கும்.

**உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.** மத்தேயு 18:19

**நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.** மாற்கு 11:24

# ஊ(ஞ்)சலாடும் இளமை

நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. - பிரசங்கி 12:1

முகம் நிலவேனும் வதனம்!
மேனி மின்னலின் பிழம்பாய்!
பிறந்து வளர்ந்து மலர்ந்து
தொடர்வது,
வாலிப வயசு!

நெஞ்சத்திலும், நேரத்திலும்
பொன்மொழியாம்
கட்டளையை போற்றி,
தேவனை நினை
வாலிபத்தில்!

தேவனுலாவும்
இதயம் தன்னிலே
நீயும் நினைத்தால்
விழித்துக் கொள்ளும்
உன் ஜீவன்!

புத்தியில்லாமையை நீக்கி!
சத்திய தேவனுக்கு
நித்திய பணி செய்வாய்!

வெண்புறாவென
உன்னைக் கண்டு!
சிறகு கொண்டு
அணைப்பார்!

நல்விழி இளைஞராய்
உனக்காய் மங்களங்கள்
பாடும்!
புனிதமிகும் இப்பருவத்தில்
விழிப்புத்தேவை!

தவறாமலே
தடம்புரளாமலே!
நற்கனி தந்து
நாளும் வளம் பெறு!

வெறும் மரமானால்
வெட்டி வீழ்த்தப்படும்!
வாலிபப்பருவத்தில்
உன் நேசரை
நினைத்துக்கொள்
கண்ணே!

பேதையராய் இராமல்
கோதையரே விழித்திடுங்கள்!
பாதைக்கு வெளிச்சம்
பேதைக்கு தீபம்
திருவசனம்!

புதையலென்ற
வேதத்தில் முத்தான திருவசனம்
நித்தம் நாம் தியானிப்போம்!
பெண்ணே!


# யோசுவா

தேவன் தந்த நியாயப்பிரமாணங்களைப் பெற்று இஸ்ரவேலர்களுக்கு கொடுத்த முதுபெரும் தலைவரான மோசேயின் உதவியாளர்தான் யோசுவா. மோசேயேயைவிட 35 வயது இளையவர். மோசேக்கு இணையாக, பரலோக தேவனிடம் முழுமையான நம்பிக்கையும் பற்றும் கொண்டிருந்தவர். மிகச்சிறந்த போர்வீரராக விளங்கிய யோசுவா, எப்பிராயீம் கோத்திரத்தை சேர்ந்த நூன் என்பவரின் மகன்.

யோசுவாவின் தகுதியைக் கண்ட தேவன் அவரை இஸ்ரவேலர்களின் 12 கோத்திரங்களுக்கும் தலைவராகத் தேர்ந்தெடுத்தார். தேவனின் தேர்வு தூய்மையும் துல்லியமும் மிக்கதாக இருக்கும் என்பதற்கு யோசுவா எப்படி சிறந்த உதாரணமாக அமைந்தார் என்பதைப் பார்ப்போம்.

மோசே இஸ்ரவேலர்களின் தலைவராக நீண்டகாலம் இருந்தார். முதுமையின் விளிம்பில் இருந்த அவர், ‘‘எனக்குப் பின்னர் மக்களைக் கவனித்துக் கொள்ள ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்துத் தாருங்கள்’’ என தேவனிடம் கேட்டார். அதற்கு தேவன், ‘‘உனது உதவியாளனாகிய ‘‘யோசுவாவிடம் போய், நீதான் புதிய தலைவர் என்று சொல்’’ என்றார். உடன் மோசே இஸ்ரவேலர்களிடம் யோசுவாவை அழைத்துச் சென்று ‘‘நான் இன்னும் அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டேன்.

உங்களுக்குப் புதிய தலைவராக யோசுவாவை தேவன் தேர்ந்தெடுத்திருக்கிறார். அவர் நமக்குத் தருவதாக வாக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்தான் உங்களைக் கூட்டிக்கொண்டு



போவார்'' என்று சொன்னார். பின்னர் மோசே தனது 120-வது வயதில் இறந்து போனார். மோசேயின் மறைவுக்குப் பின்னர் தேவன் தேர்ந்துகொண்ட யோசுவாவை இஸ்ரவேலர்கள் முறைப்படி தலைவராக ஏற்றுக்கொண்டார்கள்.

மோசே உயிரோடு இருந்தவரை அவரிடம் தேவன் உரையாடியதைப் போலவே இப்போது தனது புதிய ஊழியனாகிய யோசுவாவிடம் தேவன் உரையாடினார். யோசுவாவை அழைத்த தேவன், ''நான் மோசேயுடன் இருந்தது போலவே உன்னோடும் இருப்பேன். உன்னைவிட்டு விலகவும் மாட்டேன், உன்னைக் கைவிடவும் மாட்டேன். நீ தைரியமாகவும் உறுதியாகவும் இரு. உங்கள் முன்னோர்களுக்கு நான் வாக்குக் கொடுத்த தேசத்தை சொந்தமாக்கிக்கொள்ள மக்களை நீ வழிநடத்திச் செல்.

தைரியமாகவும் ரொம்பவே உறுதியாகவும் இரு. என் ஊழியன் மோசே உனக்குக் கொடுத்த நியாயப்பிரமாணம் முழுவதையும் கவனமாகக் கடைப்பிடி. அதைவிட்டு வலது பக்கமோ இடது பக்கமோ விலகிப் போகாதே, அப்போதுதான் நீ எல்லாவற்றையும் ஞானமாகச் செய்வாய். இந்த நியாயப்பிரமாண புத்தகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டே இரு. அதில் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் கவனமாய்க் கடைப்பிடிப்பதற்காக இரவும் பகலும் தாழ்ந்த குரலில் அதை வாசி.

அப்போதுதான் வாழ்க்கையில் உனக்கு வெற்றி கிடைக்கும், நீ ஞானமாகவும் நடப்பாய். நான் ஏற்கெனவே சொன்னபடி, தைரியமாகவும் உறுதியாகவும் இரு. பயப்படாதே, திகிலடையாதே. நீ போகும் இடமெல்லாம் நான் உன்னோடு இருப்பேன். நீ மக்களை அழைத்துக்கொண்டு யோர்தான் ஆற்றைக் கடந்து, கானான் தேசத்துக்குப் போ'' என்று சொன்னார்.

யோசுவா தன்னிடமும் தனது வீரர்களிடமும் இருந்த ஆயுதங்களை நம்பவில்லை. மாறாக தேவன் தனக்குச் சொன்ன வார்த்தைகளையே ஆயுதமாக எண்ணினார். யோர்தானுக்கு அந்தப் பக்கமிருந்த கானான் தேசத்தில் எரிகோ நகரத்தின் கோட்டை யாராலும் தகர்க்க முடியாததாக இருந்தது. அந்த நகரின் நிலவரத்தை உளவறிந்த யோசுவா, ''கானான் தேசத்துக்குப் போக இதுதான் சரியான நேரம்; எல்லாரும் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு கிளம்புங்கள்'' என்று சொன்னார்.

பிறகு, நியாயப்பிரமாணங்கள் வைக்கப்பட்ட புனிதப் பெட்டியை சுமந்து செல்லும் ஆசாரியர்களை, முதலில் யோர்தான் ஆற்றுக்குள் இறங்கச் சொன்னார். அந்தச் சமயத்தில், யோர்தான் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், பெட்டியைச் சுமந்த ஆசாரியர்கள் ஆற்றில் கால் வைத்த உடன், தண்ணீர் ஓடுவது நின்றது; ஆற்றின் தண்ணீர் சுத்தமாக வடிந்து தரை தெரிந்தது! ஆசாரியர்கள் இப்போது ஆற்றின் நடுப்பகுதிக்குப் போய் நின்றார்கள்.

மக்கள் எல்லாரும் அக்கரைக்குப் போய்ச் சேரும்வரை அவர்கள் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். எகிப்தியர்களிடமிருந்து கடவுள் மீட்டு அழைத்து வந்தபோது, கடலை இரண்டாகப் பிரித்து கட்டாந்தரையாக்கிய கடவுள் செய்த அற்புதம் யோசுவாவுக்கு அப்போது நினைவுக்கு வந்தது. கடவுள் தன்னோடு இருப்பதை அவர் உணர்ந்துகொண்டார்.

அதற்குப் பிறகு, இஸ்ரவேலர்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து எரிகோ கோட்டை நகரத்தை அடைந்தார்கள். தினமும் அந்த நகரத்தை ஒரு முறை வீதம் ஆறு நாட்களுக்கு அந்த நகரத்தைச் சுற்றிவரும்படி கடவுள் கூறியதைக் கேட்டு தனது வீரர்களோடு அவ்வாறே செய்தார் யோசுவா.

ஏழாவது நாளில், ஏழு முறை அந்த நகரத்தைச் சுற்றி வந்தார்கள். பிறகு, ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதினார்கள். இஸ்ரவேல் வீரர்கள் பயங்கரமாகக் கத்தினார்கள். உடனே, எரிகோவின் மதில்சுவர் இடிந்து விழுந்தது. யோசுவாவின் தலைமையில் முதல் வெற்றி இஸ்ரவேலர்களுக்குக் கிடைத்தது.

எரிகோவைப் பற்றிய செய்தி கானானில் இருந்த மற்ற குறுநில தேசங்களுக்கும் பரவியது. அவற்றின் அரசர்கள் ஒன்றாக இணைந்து இஸ்ரவேலர்களுடன் போரிட முடிவு செய்தார்கள். ஆனால், கிபிலோனியர்கள் மட்டும் கிழிந்துபோன பழைய உடைகளை அணிந்துகொண்டு யோசுவாவிடம் வந்தனர். அவரிடம், ''நாங்கள் வெகு தொலைவிலிருந்து வருகிறோம்.

உங்களது தேவனைப் பற்றியும், எகிப்திலும் மோவாபிலும் அவர் உங்களுக்கு உதவி செய்ததைப் பற்றியும் கேள்விப்பட்டோம். எங்களைத் தாக்க மாட்டீர்கள் என்று எங்களுக்குச் சத்தியம்செய்து தாருங்கள், நாங்கள் உங்களுக்குப் பணியாளர்களாக இருப்போம்'' என்று வேண்டினார்கள். அவர்கள் சொன்னதை நம்பி யோசுவா அவர்களுக்கு இரங்கினார்.

ஆனால் மூன்று தினங்களுக்குப் பின்னர், அவர்கள் வெகு தொலைவிலிருந்து வரவில்லை என்பதும் அவர்களும் கானான் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்றும் தெரியவந்தது. யோசுவா கோபப்படாமல் அவர்களிடம், ''ஏன் எங்களிடம் பொய் சொன்னீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், ''எங்களுக்குப் பயமாக இருந்தது! உங்கள் கடவுளாகிய பரலோக தேவன் உங்களுக்காகச் சண்டை போடுகிறார் என்று எங்களுக்குத் தெரியும். தயவுசெய்து எங்களைக் கொன்றுவிடாதீர்கள்!'' என்று கெஞ்சினார்கள். அதைக் கேட்டு யோசுவா அவர்களை மன்னித்து உயிரோடு விட்டுவிட்டார்.

கிபிலோனியர்களை மன்னித்த யோசுவா மீதும் கிபிலோனியர்கள் மீதும், கானானைச் சேர்ந்த ஐந்து அரசர்கள் மேலும் கோபம் கொண்டார்கள். தங்கள் படைகளோடு அவர்களைத் தாக்க வந்தார்கள். போரில் இஸ்ரவேலர்களின் வீரத்தைக் கண்ட ஐந்து அரசர்களின் படையினர் நாலாப்பக்கமும் சிதறி ஓடினார்கள்.

அவர்கள் ஓடிய பக்கமெல்லாம், தேவன் அவர்கள்மேல் பெரிய பெரிய ஆலங்கட்டிகளை வானத்திலிருந்து விழச் செய்தார். மாலை மயங்கியது. அதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு எதிரிகள் ஓடி மறைய நினைத்தார்கள். பிறகு யோசுவா, சூரியனை அசையாமல் நிற்க வைக்கும்படி கடவுளிடம் கேட்டார். அவர் கேட்டபடியே ஐந்து அரசர்களின் படைகளை இஸ்ரவேலர்கள் முற்றாகத் தோற்கடிக்கும்வரை சூரியன் மறையவே இல்லை.

அந்த மாபெரும் வெற்றிக்குப் பின்னர் பல நூறு ஆண்டுகள் தேவன் வாக்களித்த கானான் தேசத்தில் இஸ்ரவேலர்கள் குடியேறினார்கள். அங்கே வீடுகளையும் நகரங்களையும் கட்டினார்கள், பயிர்செய்தார்கள், திராட்சைத் தோட்டங்களையும் பழத் தோட்டங்களையும் அமைத்தார்கள். பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்தை தேவன் அவர்களுக்குக் கொடுத்தார். யோசுவா எனும் மாவீரன் கடவுளின் ஊழியனாக இருந்து அதை சாதித்துக் கொடுத்தார்.

# நோவா

பூமியில் வாழ்ந்த கெட்ட மனிதர்களுக்கு மத்தியில் ஒருவர் மட்டும் நீதிமானாகவும் குற்றமற்றவராகவும் இருந்தார். அவர் தேவன் காட்டிய வழியில் நடந்தார். குடும்பத்தினரையும் தன் வழியில் அவர் வழிநடத்தினார். அவரே நோவா. அதனால் அவர் தேவனுக்குப் பிரியமானவராக இருந்தார்.

ஆதாமின் பரம்பரையில் வந்த லாமேக் என்பவரின் மகனாகப் பிறந்தார் நோவா. அவர் பிறந்தபோது ''தேவன் சபித்த இந்த மண்ணில் நாம் படாத பாடுபடுகிறோம்; ஆனால், இவன் நமக்கு ஆறுதல் தருவான்'' என்று கூறி, நோவா எனப் பெயர் சூட்டப்பட்டார். நோவாவின் காலத்தில் மனித இனம் பலுகிப் பெருகியிருந்தது. ஆனால், தேவனுக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்ற பக்தி இல்லை. பக்தி இல்லாத காரணத்தால் மனிதர்கள் மத்தியில் நீதி இல்லாமல் இருந்தது. நீதி இன்மையால் வன்முறை தலைதூக்கித் திரிந்தது.

மனிதர்கள் மிக மோசமாக நடந்துகொண்டதையும், அவர்களுடைய உள்ளத்தின் எண்ணங்களும் ஆசைகளும் எப்போதும் மோசமாகவே இருந்ததையும் தேவன் கவனித்தார்.

பூமியில் மனிதர்களைப் படைத்ததை நினைத்து மிகவும் வேதனைப்பட்டார். அதனால் ''நான் படைத்த மனிதர்களை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. அவர்களை இந்தப் பூமியிலிருந்து அடியோடு அழிக்கப்போகிறேன். வீட்டு விலங்குகள், ஊரும் பிராணிகள், பறக்கும் உயிரிகள் எல்லாவற்றோடும் சேர்த்து அவர்களை அழிக்கப்போகிறேன்'' என்று தேவன் கூறியதை பரிசுத்த வேதாகமத்தின் ஆதியாகமம் வெளிப்படுத்துகிறது. ஆனால், தன் சாயலாகப் படைத்த மனித இனத்தை முற்றாக அழிப்பதற்குத் தேவன் விரும்பவில்லை.

நோவாவிடம் தேவன் பேசினார். ''வானத்தின் கீழிருக்கிற எல்லா உயிர்களையும் அழிக்க வேண்டுமென்று நான் முடிவுசெய்துவிட்டேன். அதற்காகப் பெரிய வெள்ளத்தைக் கொண்டு வரப்போகிறேன். அப்போது பூமியிலுள்ள எல்லா உயிர்களும் இறந்துபோகும். ஆனால், நான் உன்னோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறேன். நீ, உன் மனைவி, உன் மகன்கள்,



உன் மருமகள்கள் ஆகியோரையும் உங்களோடு சேர்த்து மற்ற உயிர்களையும் நான் காப்பாற்றப்போகிறேன்.

அதற்காக கொப்போர் மரத்தைப் பயன்படுத்தி நீ ஒரு பேழையை கட்டு. அதில் அறைகளை அமைத்து, அதன் உள்ளேயும் வெளியேயும் தார் பூசு. பேழையின் நீளம் 300 முழமும், அகலம் 50 முழமும், உயரம் 30 முழமும் இருக்க வேண்டும். வெளிச்சம் வருவதற்காகப் பேழையின் கூரைக்குக் கீழே ஒரு முழம் விட்டு ஜன்னல் வை. பேழையின் பக்கவாட்டில் ஒரு கதவைப் பொருத்து.

கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம் என மூன்று தளங்களையும் அமைக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டார். தேவன் கூறியபடியே வெள்ளம் வருமா, வராதா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டிராமல், தன் மீதும் தனது குடும்பத்தின் மீதும் தேவன் காட்டிய கருணையைக் கண்டு, தேவனின் சொற்களுக்கு அப்படியே கீழ்ப்படிந்து பேழையைக் கட்டும் வேலையை நோவா தன் குடும்பத்தினருடன் சேர்ந்து தொடங்கினார்.

தேவன் குறிப்பிட்ட அளவிலேயே நோவா பேழையைக் கட்டத் தொடங்கினார். தன் மகன், மனைவி உள்ளிட்ட குடும்பத்தாரின் கடும் உழைப்பில் அந்தப் பேழை மெல்ல உருப்பெற்றுவந்தது. நாட்கள் உருண்டோடின. பேழையைக் கட்டுவது நோவாவுக்கு அவ்வளவு சுலபமாக இல்லை. ஆனால் நோவா சோர்ந்துவிடவில்லை. நோவாவின் குடும்பத்தைப் பார்த்த மற்ற மனிதர்கள் என்ன நினைத்திருப்பார்கள். 'இவன் என்ன முட்டாளா; பூமி பெருவெள்ளத்தால் அழியப்போகிறது' என்பதை ஏன் இவன் நம்ப வேண்டும் என்று கிண்டல் செய்திருப்பார்கள்.

ஆனால் தேவனின் சொற்களை மனதை விட்டு விலக்காத நோவா, இதுபோன்ற விமர்சனங்களால் மனதை மாற்றிக்கொள்ளவில்லை. தேவனின் கட்டளையை நிறைவேற்றி முடித்தார். அதேபோல நோவா செய்தால் அது சரியாகவே இருக்கும், அவர் தேவன் கூறுவதைத் தட்டமாட்டார் என்று அவரது குடும்பத்தார் அனைவரும் நோவாவின் பக்திக்கும் அவரது தலைமைத்துவத்துக்கும் மதிப்பளித்தனர்.

நோவாவின் இந்த விசுவாசத்தைப் பற்றி விவிலியத்தின் எபிரேயர் புத்தகம் இப்படிக் கூறுகிறது, ''அதுவரை வெள்ளம் என்ற ஒன்றைப் பார்க்காத நோவா, அதைப் பற்றிக் தேவனிடமிருந்து எச்சரிக்கை கிடைத்தபோது, தேவன் மீதான தனது பயத்தையும் கீழ்ப்படிதலையும் காட்டினார். தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு பேழையைக் கட்டினார். இந்த விசுவாசத்தால்தான் உலகத்தை அவர் கண்டனம் செய்தார். அதே விசுவாசத்தால்தான் நீதிமான்களில் ஒருவரானார்.''

''உன்னோடும் உன் குடும்பத்தினரோடும் சேர்த்து மற்ற ஒவ்வொரு உயிரினத்திலும் ஆண், பெண் என்று ஒரு ஜோடியைப் பேழைக்குள் கொண்டுபோ'' என தேவன் உத்தரவிட்டதால் அவ்வாறே நோவா செய்தார். தனது குடும்பத்துக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உண்பதற்குத் தேவைப்படும் எல்லா வகையான உணவையும் பேழைக்குள் சேமித்து வைத்தார். கடவுள் கூறியபடியே பெருவெள்ளம் வந்தது. பூமியின் சகல உயிர்களையும் தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களையும் பெருவெள்ளம் அழித்தது.

அந்த அழிவின் மாபெரும் சாட்சியாக மட்டுமல்ல; தேவனது மீட்பின் சாட்சியமாகவும் நோவா இருந்தார். நோவா உட்பட அவரது குடும்பத்தினர் எட்டுப் பேரும் நோவா தேர்ந்துகொண்ட உயிரினங்களும் உயிர்பிழைத்தனர். பூமியில் மனித இனம் புத்துயிர்பெற, நாம் இன்று உயிரோடு இருக்க, நோவா எனும் பெருமகனின் கீழ்ப்படிதலே காரணமாக இருந்தது. மண்ணில் மனித இனம் மறுமலர்ச்சி அடைய நோவா எனும் மூப்பனின் தெய்வ பக்தியே ஆதாரம்.



நீங்கள் உபவாசம் இருப்பதை...
உங்கள் பிதாவானவர் காண்பார்...
உங்களுக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.
மத்தேயு 6:18
திருப்பத்தூர்
மாதாந்திர சிறப்பு
உபவாச
கூடுகை
PASTOR
OSBORNE
JEBADURAI
ஒவ்வொரு மாதமும்
இரண்டாவது சனிக்கிழமை
காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்
9003067777, 9884908777, 9884916777




இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். சங்கீதம் 63: 6
அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள் நடத்தும்
திருப்பத்தூர் மாதாந்திர
அற்புத
முழு இரவு
ஜெபம்
இரவு 9.30 மணிமுதல்
1.30 மணிவரை
Pastor
OSBORNE
Jebadurai
அபிஷேகம் நிறைந்த ஆராதனை
வல்லமையான ஜெபம்
சத்திய வார்த்தை
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் அருகில்
திருப்பத்தூர் மாவட்டம், 9884908777, 9003067777




Elim
GLORIOUS REVIVAL CHURCH

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல்
வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; கலாத்தியர் 6:14

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
நடத்தும்

# 40 நாட்கள் சிலுவை தியானக் கூட்டம்

பிப்ரவரி
14
முதல்
தினமும்
மாலை
6.30 PM

தொடர்ந்து தேவனை ஆராதிக்க போகிறோம்

PASTOR
OSBORNE
JEBADURAI

பிப்ரவரி 14-ம் தேதி
சாம்பல் புதன்கிழமை முதல்
மார்ச் 29-ம் தேதி புனித வெள்ளி வரை
மாலை 6.30 மணி முதல்
இரவு 8.30 மணி வரை

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

இடம்: ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777